Published on 14, Jan-2025 ISSN: 3049-2688 (Online)

# எஸ். அர்ஷியாவின் அதிகாரம் நாவலில் இஸ்லாமியர் எதிர்கொள்ளும் சமகாலச்சிக்கல்கள்

ரா. ரமேஷ்
முனைவர்பட்ட ஆய்வாளர் தமிழ் உயராய்வு மையம்,
அமெரிக்கன் கல்லூரி, மதுரை
முனைவர் சே. பாலகிருஷ்ணன்
நெறியாளர், உதவிப்பேராசிரியர்
தமிழ் உயராய்வு மையம், அமெரிக்கன் கல்லூரி, மதுரை

## முன்னுரை

கதை சொல்லும் மரபு தமிழகத்தில் தொன்மைக்காலம் தொட்டு இருந்து வந்தாலும், புதினம், சிறுகதை போன்ற புனைகதை வடிவங்கள் தமிழகத்திற்கு மேலைநாட்டவரால் அறிமுகப்படுத்தப்பட்டது. இலக்கியக் கையளிப்பில் ஏனைய மதத்தினரைப் போலவே இஸ்லாமியர்களும் இன்தமிழுக்குச்; செய்யுள், உரைநடை எனும் இருவகையில் எண்ணற்ற நூல்களை இயற்றியுள்ளனர். அவர்கள் தம் சமயக் கருத்தைப் பரப்பும் பெருநோக்கு கொண்டிருந்தனர். இஸ்லாமியத் தமிழிலக்கியம் தமிழில் எழுதியன அரபுமொழியில் எழுதியன என இருபிரிவில் அடங்கும். இஸ்லாமியக் கோட்பாடுகளைக்; கொண்டவை சமயத் தொடர்பில்லாதவை என இரு போக்கில் உள்ளன. அதுபோன்றே அன்னவர் தொண்டு தமிழை வளர்த்த புலவர்களும் அவர்கள் நூல்களும் ஆதரித்த புரவலர்களும் என இருமுறையில் அமையும். மேலும், முந்நூறு ஆண்டுகாலத் தமிழ் இலக்கிய வரலாற்றுப் பின்புலத்தைக் கொண்டதமிழ் முஸ்லீம் நாவல் பரப்பில் ஏராளமான தமிழ் இஸ்லாமியப் படைப்பாளர்கள் தமது மிகுதியான பங்களிப்பைச் செய்துள்ளனர். தமிழகம் மற்றும் இலங்கையைச் சேர்ந்த சுமார் ஐந்நூறுக்கும் மேற்பட்டோர் தமிழ் இஸ்லாமியச் சமூகப் பின்புலத்தை அடிப்படையாகக் கொண்டு நாவல்களைப் படைத்துள்ளனர். அவ்வாறு படைக்கப்பட்டுள்ள நாவல்களின் பொருண்மையும் கருப்பொருளும் முஸ்லீம் சமூகத்தைக் குறித்து அறிவதற்கும் ஆய்வு மேற்கொள்வதற்கும் புதிய வாய்ப்புகளை உருவாக்கித் தந்துள்ளன எனலாம்.

## தமிழ் இஸ்லாமிய இலக்கியங்கள்

பிரதாப முதலியார் சரித்திரம் என்னும் முதல் நாவல் தோன்றி ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு இஸ்லாமிய நாவல் தோன்றியதாக அறியமுடிகிறது. இந்தியாவில் சிறுபான்மைச் சமூகமாக வாழும் இஸ்லாமியச் சமூகத்தின் படைப்பாளர்கள் தங்கள் சமயத்தின் வழிமுறைகளையும் சமூக வாழ்வியல் சிக்கல்களையும் நாவல்களாக எழுதத் துவங்கினர். இஸ்லாம் என்னும் சமயத்தைப் பின்பற்றுபவர்கள் முஸ்லீம்கள் என அறியப்பட்டனர். தமிழில் வெளிவந்த முதல் முஸ்லீம் நாவலாகச் சித்திலெப்பை முகமது காசிம் மரைக்காயர் எழுதிய அசன்பே சரித்திரம் என்னும் நாவல் அறியப்படுகிறது. இந்நாவல் இலங்கை முஸ்லீம்களிடமிருந்து வெளிவந்த முதல் நாவல் என்ற சிறப்பைப் பெற்றதுடன் தமிழ் இஸ்லாமிய நாவல்களின் முன்னோடி என்ற பெருமையைப் பெற்றது. இத்தகைய வரலாற்றுப் பின்புலத்தில் எழுத்தாளர் அர்ஷியாவின் எழுத்துக்களை வைத்துப்பார்க்க. வேண்டியுள்ளது. எழுத்தாளர் எஸ்.அர்ஷியா நாவல், சிறுகதை, கட்டுரை, மொழிபெயர்ப்பு என்று பல்துறைகளில் செயல்பட்டு கிட்டத்தட்ட ஏழு நாவல்களையும், இரண்டு சிறுகதைத் தொகுப்புகளையும், எட்டு மொழிபெயர்ப்பு நூல்களையும் வெளியிட்டு தமிழ் நவீன இலக்கியத்திற்கு பெரும் பங்காற்றியுள்ளார். இவரது எழுத்துக்களைப் பாராட்டி தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் பரிசினை 2009ஆம் ஆண்டு ஏழரைப் பங்காளி வகையறா நாவலுக்கும், 2010ஆம்

ஆண்டு அழகிய நாயகி அம்மாள் விருதும், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் பரிசையும் பெற்றுள்ளார். இத்தகைய சிறப்புக்களைப் பெற்றுள்ள அர்ஷியா தன்னுடைய புதினமான ***அதிகாரம்*** என்னும் நாவலில் சமகாலத்தில் இஸ்லாமியர்கள் பல்வேறு சிக்கல்களுக்கு உள்ளாவதை விரிவாகவும், நுட்பமாகவும் பதிவு செய்துள் ளார். இக்கட்டுரையில் அதிகாரம் நாவலில் இஸ்லாமியர்கள் எதிர் கொள்ளும் சிக்கல் களை இனங்காண்பதே நோக்கமாக அமைகிறது.

## நவீன இலக்கியமும் இஸ்லாமியரின் பங்களிப்பும்

அச்சு ஊடகத்தின் வருகையினால் பழந்தமிழ் இலக்கியங்கள் அச்சேறத் தொடங்கியது. அது போலவே தமிழில் புதிய இலக்கிய வடிவங்களான நாவல், சிறுகதை, கவிதை, கட்டுரை போன்ற உரைநடை இலக்கியங்கள் தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்தன. இத்தகைய நவீன இலக்கியங்கள் அதுவரை பேசப்படாத மனிதர்களையும், அவர்களு டைய வாழ்வியலையும் பதிவுசெய்தன. அந்த வகையில் இஸ்லாமியச் சமூகத்தவர் பற்றியும், அவர்களின் வாழ்வியல் முறைகள், சடங்கு கள், வழிபாடு முறைகள் போன்றவைகள் பதிவுசெய்யப்படலாயின. பொதுவாக இஸ்லாமியச் சமூகம் பற்றிய மேலோட்ட மான புரிதல்கள் பலருக்கும் காணப்பட்டன. இஸ்லாமியச் சமூகமானது மிகவும் இறுக்க மான வாழ்க்கைமுறையைக் கொண்டது என்பன போன்ற புரிதல்களையும், மற்ற சமூகத்தவர் எவரும் எளிதில் உட்புக முடியாத அளவிற்கு இஸ்லாமியச் சமூகத்தை வேறுபடுத்திக் காட்டுவது எவை என்ற கேள்விக்கான விடையை அம்மக்களின் பண்பாட்டுக்குள்ளிருந்தே தேடமுடியும். அத்தகைய பண்பாட்டுக் கருவூலமாக விளங்குவதே இஸ்லாமியரின் நவீன இலக்கியப்பங்களிப்பாகும். நவீன இலக்கியப் படைப்பாளுமைகளான தோப்பில் முகமது மீரான், ஆளூர் ஜலால், ஜே.எம்.சாலி, கருணை மணாளன், புண்ணியாமீன், அப்துல் ஸமது, ஜுனைதா ஷெரீப், சல்மா, மீரான் மைதீன், ஜாகிர் ராஜா, அர்ஷியா போன்ற இஸ்லாமி யப் படைப்பாளர்கள் நாவல், சிறுகதை, கவிதை என்று வெவ்வேறு நிலைகளில் தமது படைப்புச் செயல்பாட்டில் ஈடுபட்டுள்ளனர். இஸ்லாமியர்களின் பண்பாட்டுத் தளத்தினை தமிழ்ப் புனைவுலகில் நேர்த்தியாகப் பதிவு செய்தவர்களுள் கீரனூர் ஜாகிர்ராஜா மிகவும் குறிப்பிடத்தக்கவர். இவருடைய மீன்காரத் தெரு (2006), கருத்தலெப்பை (2007), துருக்கித் தொப்பி (2008), வடக்கேமுறி அலிமா (2009), மீன்குகைவாசிகள் (2011) எனத் தொடர்ச்சியாகவும் புதினங்களை வெளி யிட்டு இஸ்லாமியரின் வாழ்வியலையும் அவர்களது பண்பாடுகளையும் பதிவு செய்துவந்துள்ளதை நம்மால் அறிய முடிகிறது. அதுபோலவே இஸ்லாமியரைக் குறித்து இஸ்லாமியர் பதிவு செய்ததைப் போலவே இஸ்லாமியரல்லாத தமிழ்ப் படைப்பாளிகளும் இஸ்லாமியரைக் குறித்துப் பதிவு செய்துள்ளனர். அவர்களுள் கு. ப. ராஜகோபாலன் (நூருன்னிஸா, 1934) பாரதி (ரயில்வே ஸ்தானம், 1920) ஆகியோர் சிறுகதைகளில் இஸ்லாமியருடைய வாழ்விய லையும், இஸ்லாமியர் குறித்த பதிவுகளையும் பதிவுசெய்துள்ளனர். இவ்வாறு புனைகதை வெளியினில் இஸ்லாமியரைப் பற்றி இஸ்லாமியரும் இஸ்லாமியரல்லாதவரும் தமது படைப்புகளை வெளியிட்டுள்ளதை அறியமுடிகிறது.

இஸ்லாமிய மக்களின் வாழ்வியலைப் பற்றி தெரிந்து கொள்வதற்கு என்ன இருக்கிறது என்ற சமூக மனநிலையே வாசக மனநிலையிலும் பிரதிபலிக்கிறது என்கிறார் கரீம் (சிறுகதை-சிறுகதை குறித்த கட்டுரை கள், 2020).

## அதிகாரம் நாவல் பிரதிகட்டமைக்கும் சமகாலஅரசியல்

***அதிகாரம்*** என்பது குறிப்பிட்ட எல்லைக்குள் செயல்படுத்தக்கூடிய சிறப்புரிமையாகக் கருதப்படுகிறது. இது மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் கடைபிடிப்பதைப் பார்க்க முடிகிறது. தந்தை/தாய் தனது குடும்பத்தி னர் மீதும், ஆசிரியர் தனது மாணவர்கள் மீதும், முதலாளி தன்னிடம் வேலை செய்பவர்கள் மீதும் அதிகாரத்தைப் பயன் படுத்துகின்றனர். அதிகாரத்தை எந்த அளவு க்கு உபயோகிப்பது என்பதற்கான எல்லை தனிமனிதர் சார்ந்ததாகவோ அல்லது அமைப்பு சார்ந்ததாகவோ இருந்தாலும் அதற்கான எல்லை முறையாக வரையறுக்கப் படவில்லை என்பதுதான் உண்மை.

ஆட்சியில் அல்லது முக்கியமான பொறுப்பில்

இருப்பவர்களில் பெரும்பாலானவர்களுக்கு அவர்களது சீருடையும், பதவியும் தரும் ***அதிகாரம்*** அவர்களைப் போதைக்கு உள்ளாக்கி அதன்மூலம் மற்றவர்களைப் பலவிதங்களில் சிரமப்படுத்தி ஒடுக்குகின்ற அல்பசந்தோஷத்தை அனுபவிக்க வைக்கிறது. அதிகாரத்துக்கு அடிமையான பலபேர்களை நாம் தினசரி வாழ்வில் பார்க்கிறோம். அதனால்தான் முதுமையிலும் பதவிக்காகப் பரிதவிக்கும் அரசியல்வாதிகள் இருக்கிறார் கள். அதிகாரம் என்பது போதையானது இதனைப்பற்றி குறிப்பிடும் பொழுது மனிதன் எப்போது தன்னைத்தானே விரும்பத் தொடங்குகிறானோ அப்போதே, அவனிட மிருந்து அன்பு, பாசம், பரிவு, நேசம், பச்சாதாபம், இணக்கம், இயைவு, உறவு உள்ளிட்டவை மெல்ல மெல்ல விலகிக் கொள்கின்றன. எல்லாவற்றையும் ஒதுக்கித் தள்ளும் அவன், அதிகாரத்தை மட்டும் கையில் எடுத்துக் கொள்கிறான். ஒரு எல்லைவரைவுக்குள் மட்டுமே அதிகாரத்தை செயல்படுத்த முடியும் என்பதைத் தெரிந்தும் ஆபத்தான அதை விரிவுபடுத்த முனையும் அவன் பேராசை இலக்கற்றதாக இருக்கிறது. இதில் எந்தப்படிநிலையும் விலக்கல்ல. அதிகாரம் சுவைத்துப் பார்த்தவர்களுக்கு போதையானது. போதைக்காக எதையும் இழக்கத் தயாராக இருப்பார்கள்... (அதிகாரம், ப. 6). நீங்கள் பார்த்துக் கடந்து போனதை, நான் எழுத்தாக்கியிருக்கிறேன் என்று பதிவு செய்திருக்கிறார் எஸ்.அர்ஷியா.

## அதிகாரம் என்னும் சொல்லிற்கு அகராதி தரும் விளக்கம்

அதிகாரம் என்னும் சொல்லிற்கு „வகிக்கும் பதவியாலோ நிலையாலோ பிறரைக் கட்டுப்பாடு செய்யும் ஆற்றல் அல்லது ஆணை பிறப்பிக்கும் உரிமை... (எஸ்.ராம கிருஷ்ணன், 2024) என்று க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி விளக்கம் தருகிறது. எனவே அதிகாரமானது சாதியின் பெயரால், மதத்தின் பெயரால், பதவியின் பெயரால், பாலினத்தின் பெயரால், பணத்தின் பெயரால் பிறரை ஒடுக்குகிறது அல்லது கட்டுப்படுத்துகிறது.

## கதைச்சுருக்கம்

மரவேலை செய்யும் சங்கரநாதனின் மனைவி பவளம். அவள் ஆடைகள் தயாரிக்கும் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறாள். திருமணமாகி ஆறு வருடங்கள் ஆகிவிட்டது. ரஞ்சனி இவர்களது ஐந்து வயது மகள். இவர்களோடு சங்கரின் அம்மாவும் புலிப் பாறைப்பட்டியில் வசித்துவருகிறார். வழக்கம் போல வேலைக்குச் சென்ற பவளம் ஒருநாள் மாலை வீடு திரும்பவில்லை. முதல் இரண்டு நாட்கள் பல இடங்களில் அவளைத் தேடும் படலம் நடக்கிறது. கோடாங்கியிடம் குறிகேட்பது என்று தேடுதல் பயணம் தொடர்கிறது. மூன்றாம் நாளும் அவள் குறித்துத் தகவல் எதுவும் தெரியாததால் சங்கரின் நண்பன் கொட்டாம்பட்டி சுந்தர் யோசனையின் பேரில் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்படுகிறது. "பவளத்தைத் தேடுவது குறித்து ஆளாளுக்குச் சொன்ன யோசனைகள் அழகர்மலை உயரத்துக்குக் குவிந்தன. எப்படித் தேடவேண்டும் என்ற நுட்பங்கள் விலையில்லாமல் வந்து விழுந்தன" (அதிகாரம்,ப.16) என நாவலாசிரி யர் குறிப்பிடுவதில் யதார்த்தம் தொணிக்கிறது.

இன்ஸ்பெக்டர் மணிமாறன் ***அய்யா*** ஆகிறார். கண்காணிப்பாளர் ஸ்டேஷனுக்கு திடீர் விசிட் வரும்போது அய்யா மிஸ்ஸிங். அங்கிருந்தவர்களிடம் "ஸ்டேஷன் ஆபிசரை என்னை வந்துப் பாக்கச் சொல்லுங்க" என்று கூறிவிட்டு அங்கிருந்து புறப்படும் போது அய்யாவின் பொலிரோ வந்து நிற்கிறது. அய்யாவின் தாமதத்துக்கான காரணத்தைக் கேட்காமல், ஒரு உமன் மிஸ்ஸிங் கேஸ் இருக்காமே அஞ்சுநாளா இன்னும் ஏன் எப்.ஐஆர் போடாம வெச்சுருக்கீங்க? சிஎஸ்ஆரும் தரலையாமே இதைக்கூட குடுக்காம அப்படியென்ன வேலை பாக்குறீங்க, ஸ்டேசன் ஆபிசர்?' என்றார். கடைசி வார்த்தைகளில் அழுத்தம் இருந்தது. ***அய்யா*** விடமிருந்து பதில் எதுவும் இல்லை. இன்னும் ரெண்டுநாள்ல புல் டீடெய்ல்ஸோட ரிப்போர்ட்டும் வரணும். அந்தப் பொண்ண கோர்ட்ல ப்ரடியூஸ் பண்ணணும்... (அதிகாரம், ப.95) என சொல்லிவிட்டுப் புறப்பட்டு விடுகிறார்.

இதனால் ஆத்திரம் அடைந்த ***அய்யா*** தனது சகாக்களை முடுக்கிவிடுகிறார். கொட்டாம் பட்டி சுந்தர் மூலம் ***அய்யா*** பவளம் குறித்து தகவல்களைச் சேகரிக்கச் சொல்ல, சுந்தரும் பவளம் வேலைபார்த்த நிறுவனத்தில் வேலைபார்க்கும் தனது உறவைச் சேர்ந்த பெண் மூலமாக சிலசெய்திகளைச்

சேகரித்துக் கொடுக்க அதன் அடிப்படையில் அங்கு சிலவருடங்களுக்கு முன்புவேலை செய்து தற்சமயம் திருப்பூரில் ஒருநிறுவனத்தில் வேலை பார்த்துவரும் மம்மதியாபுரம் முஜம்மின்னை, அவனது தாதா மூலம் விசாரணைக்கு உட்படுத்துகிறார்கள். அவன் அங்குவேலை பார்த்தபோது பவளத்தைப் பார்த்தது உண்மைதான் ஆனால் காதல், கத்திரிக்காய் எல்லாம் இல்லை. இதை அவன் பலமுறை கூறியும் நம்பாத அய்யாவும், அவரது சகபாடிகளும் முஜம்மினைஅடித்துத் துவைக்க, அவன் துவண்டுவிழுகிறான். "துலுக்க நாயே, மயிலே, மயிலே இறகு போடுங்கற மாதிரி மரியாதையா கேக்குறன். தெரியாது. தெரியாதுனுட்டேருக்க. நாயே" எங்கேடா அவளை ஒளிச்சு வெச்சுருக்க? "கேட்டுக் கொண்டே முஜம்மின் செவுளில் ஒரு அறை விட்டார். கிட்டதட்ட ஒன்னரை டன் வெயிட்டுக்கு குறைவான வெயிட் கொண்டது. விழுந்த அறையில் நிலை குலைந்து போனான்" (அதிகாரம், ப.140). அவன் உயிருக்கு எதுவும் ஆகி பிரச்சனைப் பெரிதாகிவிடக்கூடாது என்பதால் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்படுகிறான். பலத்த உட்காயங்கள் ஏற்பட்டதால் சிகிச்சை பலனளிக்காமல் இறந்துவிட, அவனது ஊர்க்காரர்களும், நண்பர்களும் நியாயம் கோரிப் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள் (அதிகாரம், ப.174). இதற்கிடையில் தொழில் நுட்ப உதவியுடன் பவளம் பெங்களூரில் இருப்பது தெரியவர, அவளைக் கைதுசெய்து தமிழகபோலீஸ் அழைத்துவருகிறது. அவள் எப்படிப் பெங்களூர் சென்றாள்; முஜம்மின்னுக்கும் அவளுக்குமான நட்பு எதுவரையில் இருந்தது என்பதையெல்லாம் நாவல் தொட்டுச் செல்கிறது.

## முடிவுரை

நவீன இலக்கியத்தில் எஸ்.அர்ஷியாவின் பங்களிப்பானது முக்கியத்துவம் வாய்ந்தது. சமூகத்தில் அன்றாடம் நடக்கின்ற நிகழ்வுகளை படைப்புக் கண்ணோட்டத்தோடு நுட்பமாகப் பதிவு செய்வதில் சிறப்பிடம் வகிக்கிறார். அதிகாரம் என்னும் நாவலில் மதுரை மக்களின் பேச்சு வழக்கினை மிக இயல்பாகக் கையாண்டுள்ளார். காவல்த் துறையின் சீருடைக்கு உள்ள அதிகாரத்தையும் அது தருகின்ற போதையினையும் சிறப்பாக பதிவு செய்துள்ளார். தாமாகவே விசாரணைக்கு முன்வந்த பொழுதும் கூட இஸ்லாமியர் என்ற காரணத்தினாலேயே அந்த இளைஞனை முறையற்ற விசாரணைக்கு உட்படுத்துவதையும் கட்டற்ற அதிகார மமதையில் சித்ரவதைக்கு உட்படுத்தப் படுவதும் இன்றைய சூழலில் ஒவ்வொரு இஸ்லாமியரும் எதிர் கொள்ளும் நியதியாகவே மாறிவிட்டது எனலாம். திரைப்படங்களில் காட்டப்படும் வன்முறைகள், தீவிர வாதம் போன்றவற்றை செய்பவர்களாக இஸ்லாமியர்களே அடையாளப் படுத்தப் படுகின்றனர். மேலும், சமகாலத்தில் இஸ்லாமியர்கள் விசாரணை, சந்தேகம் என்ற பெயரில் ஒடுக்கப்படுகின்ற தன்மையினை நுட்பமாக காட்சிப்படுத்தியுள்ளார். பெரும்பாலும் இஸ்லாமியர்கள் என்பதாலேயே அவர்கள் குற்றவாளிகள் என்ற பார்வையிலேயே சமூகமும், அதிகார வர்க்கங்களும் அடையாளப்படுத்துகின்றன என்பதை இந்நாவல் வழியே அறியமுடிகிறது.

## பார்வை நூல்கள்

1. எஸ்.அர்ஷியா, அதிகாரம், எதிர் வெளியீடு, 2016
2. உவைசு, ம.மு, "இஸ்லாமியதமிழ் இலக்கிய வரலாறு…, பதிப்புத் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 1983
3. விமலானந்தம், மது.ச. "தமிழ் இலக்கிய வரலாறு…, முல்லை நிலையம், 9.பாரதி நகர் முதல் தெரு, தி.நகர், சென்னை, 2018
4. எஸ்.ராமகிருஷ்ணன், "க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி…, மூன்றாம் பதிப்பு, க்ரியா வெளியீடு, 2024
5. மகாகவி பாரதியார், "ரயில்வே ஸ்தானம்…, சுதேசமித்திரன் (22.5.1920) (http://porulputhithu.com/bharathi)
6. கரீம், அ. "தமிழ் சிறுகதைகளில் இஸ்லாமியர்களின் வாழ்வியல்… (எஸ்.செந்தில்குமார்-தொ.ஆ.) சிறுகதை- சிறுகதைகள் குறித்த கட்டுரைகள், எழுத்து பிரசுரம், சென்னை, 2020.